# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2305/50 - 2022 නොවැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2022.11.11

*2305/50 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ், கஹவத்தை பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

அனுமதியின்றி தொடர்ச்சியாக மூன்று மாத சபை கூட்ட அமர்வுகளிற்கு சமுகமளிக்காமை காரணமாக கஹவத்தை பிரதேச சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) என்னும் பிரிவின் கீழ் தவிசாளர் பதவி வகித்த மானிக்க வடுகே வஜிர தர்ஸன டி சில்வா என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளர் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்த வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவரும் கஹவத்தை பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளவருமான தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு பிரியன்த உபுல் ஹேவகே என்பவரைப் பெயர் குறிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளாராதலாலும் ;

கஹவத்தை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சுரங்க அம்பகஹதென்னெ ஆகிய நான் 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66ஆ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு பிரியன்த உபுல் ஹேவகே என்பவர் கஹவத்தை பிரதேச சபையின் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**சுரங்க அம்பகஹதென்னெ,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கஹவத்தை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
இரத்தினபுரி,
*2022, நவம்பர் 09.*

EOG *11- 0117*


1A - G 38047 — 26 (2022/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழ் கஹவத்தை பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கஹவத்தை பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவி தொடர்ச்சியாக மூன்று மாத சபை கூட்ட அமர்வுகளிற்கு சமுகமளிக்காமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ் கஹவத்தை பிரதேச சபையின் 3 ஆம் இலக்க வெல்லந்துர வட்டாரத்தற்குத் தெரிவு செய்யப்பட்ட மானிக்க வடுகே வஜிர தர்ஸன டி சில்வா என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கஹவத்தை பிரதேச சபையின் 3 ஆம் இலக்க வெல்லந்துர வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஓபாத முஹன்திரம்லாகே பிரபாத் ஜனக சில்வா என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

கஹவத்தை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சுரங்க அம்பகஹதென்னெ ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஓபாத முஹன்திரம்லாகே பிரபாத் ஜனக சில்வா என்பவர் கஹவத்தை பிரதேச சபையின் 3 ஆம் இலக்க வெல்லந்துர வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**சுரங்க அம்பகஹதென்னெ,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கஹவத்தை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
இரத்தினபுரி,
2022, நவெம்பர் 09.

EOG 11- 0118